# சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி
# (தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி – 627 011.

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவால் ‘A’ மதிப்பீடு அளிக்கப்பட்டது:
சர்வதேசத் தரச் சான்றிதழ் ISO 9001:2015 பெற்றது.)

## சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியின் மாணவர் சேர்க்கை இணையதள பக்கம் (website) உங்களை அன்புடன் வரவேற்கின்றது.

மாணவர் சேர்க்கைக்கான நெறிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**மாணவர் சேர்க்கைக்கான வழிமுறைகள (2022-2023) / (இணையம் வழியாக மட்டுமே மாணவர் சேர்க்கை)**

- ✓ பட்டப்படிப்பிற்குரிய அனைத்து விண்ணப்பங்களும் இணைய வழியில் மட்டுமே பதிவு செய்ய இயலும்.
- ✓ அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிப்பதற்குரிய நடைமுறைகளை விண்ணப்பிப்பதற்கு முன் ஒருமுறை நன்கு வாசித்துத் தெரிந்து கொண்டு பின் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**பயனர் (username) பெயர்ப் பதிவுமுறை**

- ✓ மாணவரோ, பெற்றோரோ முதலில் மாணவரின் பெயரையும், கைப்பேசி எண்ணையும் பதிவுசெய்து இணையதள விண்ணப்பச் சேவைக்குள் உள்நுழைவதற்கான கடவுச்சொல்லை (Password) பதிய வேண்டும்.
- ✓ பயன்பாட்டிலுள்ள கைப்பேசி எண்ணைப் பதிவது அவசியம். அப்போதுதான் இணைய வழியாக அனுப்பப்படும் ஒருமுறை கடவுச்சொல்லைப் பெற்று (OTP) அதைப் பதிவிடுவது உடனே சாத்தியமாகும்.
- ✓ மாணவரோ, பெற்றோரோ விண்ணப்பப் பக்கத்திற்குள் முதலில் உள்நுழைய ஒருமுறை கடவுச் சொல்லைப் (OTP) பயன்படுத்திக் கொண்டு செல்ல வேண்டும். மறுமுறை உள்நுழையத் தங்களது கைப்பேசி எண்ணையே உள்நுழையும் அடையாளமாகப் பயன்படுத்தலாம் (login). ஏற்கனவே கொடுக்கப்பட்ட கடவுச்சொல்லையே உபயோகிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணையவழியில் விண்ணப்பித்தல் மற்றும் பதிவுக்கட்டணம் செலுத்தும் முறை**

- ✓ ஒருமுறை இந்தப் பக்கத்திற்குள் நுழைந்துவிட்டால் அடுத்து நீங்கள் செய்ய வேண்டியவற்றை மென்பொருளே விவரிக்கும். ஒரு மாணவர் எத்தனைப் பாடங்களுக்கு வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம்.
- ✓ அரசுதவி பெறும் மற்றும் அரசுதவி பெறா பாடப்பிரிவுகளுக்கான கல்விக் கட்டண விபரம் தனித்தனிப் பத்தியாகக் கொடுக்கப்பட்டிருக்கும்.
- ✓ நீங்கள் சேர விரும்பும் பாடப்பிரிவைத் தேர்ந்தெடுத்ததும் அதற்கான பதிவுக்கட்டண விபரம் திரையில் தோன்றும்.
- ✓ மாணவர் அத்தொகையைக் கடன் அட்டை, பற்று அட்டை அல்லது வலைதள வங்கிச் சேவை மூலமே செலுத்த வேண்டும். பணமாகவோ, வரையோலையாகவோ செலுத்தப்படும் கடடணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- ✓ இணையவழிக் கல்விக்கட்டணம் செலுத்தும் முறை பிற இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறைக்கு ஒப்பானதே. பணம் செலுத்தி முடித்ததும் மென்பொருள் பரிவர்த்தனைக் குறியீட்டு எண் உங்கள் கைப்பேசிக்கு வரும்.
- ✓ பணம் செலுத்துவோரின் பிந்தைய பயன்பாட்டிற்கான அவ்வெண்ணைக் குறித்து வைத்துக் கொள்ளுதல் அவசியம்.
- ✓ பதிவுக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது. பதிவிற்கான கட்டணமாக மட்டுமே அது எடுத்துக் கொள்ளப்படும். சரியான பாடத்தைத் தேர்ந்தெடுத்து அது அரசுதவி பெறும் மற்றும் அரசுதவி பெறாப் பாடப்பிரிவுகளில் எப்பிரிவைச சேர்ந்தது என்பதைக் குறிப்பிட்டால் மட்டுமே கட்ட வேண்டிய கட்டணவிபரம் திரையில் தெரிவிக்கப்படும்.
- ✓ ஒரு வேளை, கட்டணம் வங்கிக் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டு, கட்டணம் செலுத்தும் செயல்முறை இன்னும் கணினியில் முடிவடையாமல் இருந்து அதனால் மாணவர் சேர்க்கைப்படிவத்தைப் பூர்த்தி செய்யமுடியாமல் போனால், நுழைவுக் கட்டணம் செலுத்துதலை மேம்படுத்தும் வசதி மென்பொருளில் உள்ளது. அதன்படி அந்த வசதியைப் பயன்படுத்தி நிலுவைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

**மதிப்பெண் பூர்த்தி செய்தல்**

- ✓ மாணவர்கள் மென்பொருளில் கொடுக்கப்படடிருக்கும் விருப்பத்தேர்வு வசதியைப் பயன்படுத்திப் பாடங்களுக்கான மதிப்பெண் விபரங்களைப பூர்த்தி செய்ய வேண்டும்.

**படிவத்தைச் சமர்ப்பித்தல்**

தனிநபர் சார்ந்த விபரம் மற்றும் மதிப்பெண் முதலியவற்றைப் பூர்த்தி செய்து முடித்தவுடன அதனை online ல் சமர்ப்பிக்க வேண்டும். ஒருமுறை சமர்ப்பித்த பின்னர் அதில் எந்தத் திருத்தமும் செய்ய இயலாது. சமர்ப்பிக்கும் நேரமும், தேதியும் பதிவீடு செய்த விபரமாக எடுத்துக கொள்ளப்படும்.

குறிப்பு:

- ✓ இணையதளச் சேர்க்கைப் படிவத்தைப் பூர்த்தி செய்வது கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகப் பொருளாகாது.
- ✓ கல்லூரித் தேர்வுக்குழுத் தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் மாணவர்களின பட்டியலை முடிவு செய்யும், பின்னர் தேர்வுக்குரியவர்களுக்குத் தேர்ச்சிக்கு முந்தைய நேர்காணல் தேதி பற்றிய விபரங்கள் குறுஞ்செய்தி மூலமாக அனுப்பப்படும். தேவையான அசல் ஆவணங்கள் மற்றும் இணையதளத்தில் சமர்ப்பித்த சேர்க்கைப் படிவத்தின் நகல் ஆகியவற்றோடு கல்லூரி முதல்வரை பெற்றோரோடு வந்து சந்திக்க வேண்டும்.

**கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கையின போது**

- ✓ மதிப்பெண் சான்றிதழ் பத்தாம் வகுப்பு / +2 (Mark Sheets $10^{th}$ and $12^{th}$)
- ✓ மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate)
- ✓ அச்சிட்ட விண்ணப்பப் படிவம் (Printed Application Form)
- ✓ சாதிச் சான்றிதழ் (Community Certificate (BC/BCM/MBC/DNC/SC/ST/SCA)
- ✓ இரத்த வகைச் சான்றிதழ் (Blood Group Certificate)
- ✓ ஆதார் அட்டை (Aadhaar Card)
- ✓ சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் நிழற்படங்கள் : 2 (Recent Passport Size Photos 2 Nos.)
- ✓ தேவையான சான்றாதாரங்களுடன் கூடிய சான்றிதழ்களுடன் மாற்றுத்திறனாளிகள், முன்னாள் இராணுவத்தினரின் மகன் அல்லது மகள், விளையாட்டுத் துறையில் பங்கேற்ற விளையாட்டு வீரர்கள், பள்ளியில் தேசிய மாணவர் படை தேசியத் தொண்டு இயக்க மாணவர்கள் மற்றும் பிற
- ✓ நேர்காணலன்று அனைத்து மூலச் சான்றிதழ்களுடன் மூன்று நகல் பிரதிகள் தரப்படவேண்டும்